விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 164 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 18 வெள்ளிக்கிழமை (31.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கணக்கீடு A/L 2026 (தமிழ் & ஆங்கில மொழி மூலம்)
பாலகஜன் (SLTS) 077 452 0043
யாழ்.நகரின் முன்னணி ஆசிரியரின் பிரத்தியேக வகுப்பு ஆரம்பம்
KBK – கொழும்புத்துறை, கந்தர்மடம்
Zoom இன் ஊடாக இலங்கை பூராகவும் (C-0466)
A/L 2024 & Day, A/L 2025 பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
யாழ்.நகரில் தொடர்ச்சியாக முன்னணி பெறுபேறுகளை வழங்கிவரும் ஆசிரியரிடம் கற்பதற்கான வாய்ப்பு



## 2009ஆம் ஆண்டு அழிவுகள் மீள நிகழாதிருக்க உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் அவசியம்

### சனல் 4 தொலைக்காட்சி நோ ஃபயர் ஸோன் இயக்குநர்

(லண்டன்)

இலங்கையில் 2009ஆம் ஆண்டில் இடம்பெற்ற மிக மோசமான வன்முறைகள் மற்றும் மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப் படுத்துவதற்கு உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலை நாட்டப்படுவதும், பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதும் இன்றியமையாததாகும் என சனல் 4 தொலைக்காட்சியின் "நோ ஃபயர் ஸோன்" ஆவணப் படத்தின் இயக்குநர் கெலம் மக்ரே வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில்இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றக் 15

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்கள் முழுமையாக தயாராகி விட்டோம்



### தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர்

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்கள் தயாராகிவிட்டோம் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர், பாராளுமன்றத் தேர்தல் 2025ஆம் ஆண்டு நடை பெறவுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 16ஆம் திகதிக்கும் இடையில் நடத்த வேண்டும் என ஆணைக் குழுவின் 15

## நாட்டின் வறுமை 26 சதவீதமாக உயர்வு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு 15 சதவீதமாகக் காணப் பட்ட நாட்டின் வறுமை விகிதம் தற்போது 26 சத வீதமாக அதிகரித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் 15

## ஜூன் 4ஆம் திகதி பாராளுமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை கூட்டப்படவிருப்பதாகப் பாராளு மன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

இதற்கமைய ஜூன் 4ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் 10.30 மணிவரையான நேரம் வாய் மூல விடைக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், 02

### அரச ஊழியர்களின்
## சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு நட வடிக்கை எடுத்து வருவ தாக ஜனாதிபதி ரணில் 15

## தமிழினப் படுகொலையை இலங்கை அரசு ஏற்க வேண்டும்

### அமெரிக்காவில் தயாராகும் பிரேரணை

(வோஷிங்டன்)

தமிழ் மக்கள் இனப்படு கொலை செய்யப்பட்டனர் என் பதை இலங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற 3 காரணிகளை முன்வைத்து அமெரிக்க காங்கிரஸ் இலங் கைக்கு எதிரான பிரேரணையை தயாரித்து வருவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஈழ தமிழ்மக்களுடன் இராஜ தந்திர தொடர்புகளை பலப் படுத்த வேண்டும், அமெரிக் காவும் ஏனைய சர்வ தேச சமூகங்களும் 02

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்

### காலத்தின் தேவை – சித்தார்த்தன்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர் தலில் தமிழர் தரப்பு சார்பில் பொதுவேட்பாளரை களமிறக் குவது இன்றைய கால கட்டத் தின் தேவை என பாராளு மன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள் ளார்.

யாழில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். 15

### வதிரியில்
## இளம் யுவதி சடலமாக மீட்பு


(கரணவாய்)

வதிரியைச் சேர்ந்த யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பூவற்கரை, வதிரி யைச் சேர்ந்த குக 15

### யாழிலிருந்து சுண்ணாம்புக்கல்லை
## வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாது

### யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

உரிய வழித்தட அனு மதி இன்றி யாழ்.மாவட் டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சுண்ணாம்புக் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூன் 4 ஆம்...

மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை பெண்களின் வலுவூட்டல் சட்ட மூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது.

ஜூன் 6ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இலங்கை மின்சாரம் சட்டமூலம் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை எதிர்க் கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதம் நடைபெறும். ஜூன் 7ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளன. (ம-7.10)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

வட இலங்கைச் சங்கீத சபை
மருதனார்மடம் - சுன்னாகம்

அறிமுறைப் பரீட்சை திகதி மாற்றம்

வட இலங்கைச் சங்கீத சபையினால் இவ் வருடத்திற்கான அறிமுறைப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் உரிய நேரசூசிக்கு அமைவாக குறித்த நேரத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் நடைபெறும் பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சை நிலையங்களுக்கு சென்று பரீட்சைக்கு தோற்ற முடியும்.

08.06.2024 பரீட்சைகள் யாவும் 22.06.2024 திகதியும்
09.06.2024 பரீட்சைகள் யாவும் 23.06.2024 திகதியும்,
அகில இலங்கை ரீதியாக நடைபெறும்.

பொ.ரவிச்சந்திரன்
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை.
மருதனார்மடம் - சுன்னாகம்.
(C-0493)

## மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 07 - 1936



மறைவு
28 - 05 - 2024

## சண்முகம் சரசம்மா

மானிப்பாய் கலாமன்ற வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் சரசம்மா 28.05.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்வரட்ணம், அன்னம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற ரன்குமார் மற்றும் உதயராணி, பிறேம்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் கவிதா, ஈஸ்வரன், வித்தியா ஆகியோரின் அன்பு மாமியாரும் மவியா, பவிக்சன், மதுசுதன், கார்த்திகாயினி, அக்ஷயா, சஞ்யித் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2024) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(1026)

## போதிய வைத்தியர்கள் இல்லாததால்
# மருத்துவமனை பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல்
## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

போதிய வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால், நாடு முழுவதிலும் உள்ள பல வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை பேணுவது பாரிய சவாலாக மாறியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் கடுமையான வைத்தியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதேவேளை 1390 வைத்தியர்கள் அடங்கிய குழு மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியை நிறைவு செய்த போதிலும், அவர்களது நியமனம் 8 மாதங்களாக தாமதமாகியுள்ளது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

ஆறு வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை புதுப்பிக்கப்படவில்லை எனவும், நாடு பூராகவும் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுகின்ற போதும் புதிய வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கப்படாமை பாரதூரமான பிரச்சினை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7.10)

## மன்னாரிலிருந்து யாழிற்கு கடத்த முனைந்த
## 82 கிலோ ஆமை இறைச்சியுடன்
# இருவர் அதிரடிக் கைது

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்ட விரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி கடல் ஆமை இறைச்சிகளுடன் 2 சந்தேக நபர்கள் நேற்று வியாழக்கிழமை பள்ளமடு பிரதான வீதியில் வைத்து மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 82 கிலோ கடலாமை இறைச்சி பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மீன்கள் பொதி செய்து கொண்டு செல்லும் போர்வையில் குறித்த கடலாமை பொதி செய்யப்பட்டு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட நிலையில் இராணுவ புலனாய்வு துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பள்ளமடு வீதியில் வைத்து குறித்த வாகனத்தை சோதனை செய்த போது குறித்த கடலாமை இறைச்சிகள் மீட்கப்பட்டுள்ளதோடு அதை கொண்டு சென்ற இரண்டு நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7.10)

## வெளி மாவட்ட...

கல் கொண்டு செல்ல முடியாது என மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் நேற்று மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தில் அகழப்படும் சுண்ணாம்புக் கற்களை எவ்வித அனுமதியும் இன்றி வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைய, அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துகொண்ட துறைசார் அதிகாரிகள் பல்வேறு விடயங்களை முன்வைத்தனர்.

அனுமதிப்பத்திரம் இன்றி சில பகுதிகளில் சுண்ணாம்புக்கல் அகழப்படுவதோடு, வெளி மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

சட்ட விதிமுறைகளுக்கு அமைய சுண்ணாம்புக்கல் அகழ வேண்டும் எனவும், அதனை உள்ளூர் தேவைக்கே பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் விவசாய நடவடிக்கைக்காக அகழ்வுப் பணிகளில் ஈடுபடுவோருக்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனவும், அனுமதிப்பத்திர விதிமுறைகள் உரியவாறு பின்பற்றப்படுகின்றதா என தொடர் கண்காணிப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியக அதிகாரிகளுக்கு இதன்போது பணிப்புரை விடுக்கப்பட்டது .

அத்துடன், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு மண் கொண்டுவருவதை தடை செய்யும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. (ம-7.10)

## தமிழ்...

இணைந்து தமிழ் மக்களின் சுய உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும் மற்றும் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என்பதை இலங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற 3 காரணிகளை முன்வைத்து பிரேரணை தயாரிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

அண்மையில் அமெரிக்க தூதுவர் வடக்கிற்கு சென்று முன்னாள் போராளிகளை சந்தித்திருந்தார்.

தூதுவருக்குரிய நடவடிக்கைகக்கு அப்பால் சென்று இலங்கையின் உள்ளக விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதாக இலங்கையின் பாதுகாப்பு தரப்பு குற்றம் சுமத்தியிருந்தது.

இந்நிலையில், இலங்கையின் இராணுவ அதிகாரிகள் சிலர் மீது அமெரிக்கா போன்ற நாடுகள் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தன.


இவ்வாறான ஒரு பின்னணியில் அமெரிக்காவின் காங்கிரஸ் கட்சி இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்றை முன்வைக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ் அமெரிக்கர்களின் ஐக்கிய அரசியல் நடவடிக்கைக் குழு, இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் குழு மற்றும் உலகளாவிய தமிழ் அமைப்புகளுக்கான கூட்டமைப்பு ஆகியவையே இதற்கான அழுத்தத்தினை பிரயோகித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை

# 60 ஆவது அகவை நிறைவு வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




### செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

கல்விப்பணி, கடவுள்பணி, அறியாமை என்னும் இருளைப் போக்கும் பணி. இப்பணியில் 1992 முதல் அரிய பணியாற்றி ஓய்வுபெறும் அதிபர் திரு.ம.மணிசேகரன்அவர்களை வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகின்றேன். இவரது கல்விப் பணி போற்றுதற்குரியது. வன்னியிலும் மலையகத்திலும் வலிவடக்கிலும் அர்ப்பணிப்பு மிக்க சேவையாற்றியுள்ளார். புகழ்பூத்த மகாஜனக்கல்லூரியின் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக, பிரதிஅதிபராக, அதிபராக உன்னத சேவையாற்றி ஓய்வு பெறுகிறார்.

புகழ்பூத்த மகாஜன அதிபர் அமரர் திரு.கனகசபாபதி அவர்களின் காலத்தில் கற்ற இவர் அவர்களின் ஆளுமையை உள்வாங்கித் தனது அதிபர் காலத்தை கல்வியிலும் ஏனைய துறைகளிலும் மகாஜன மிளிருவதற்கு அயராது உழைத்தார். கடந்த பத்து ஆண்டுகளாக மகாஜன வெற்றி நடை போடுவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த சேவையாளனை இதய பூர்வமாக வாழ்த்துகிறேன். மணிவிழாக் காணும் அதிபர் அவர்கள் சகல செல்வங்களோடும் நீடுழி வாழ தெல்லிப்பழை துர்க்கை அம்பாளை பிரார்த்தித்து அமைகிறேன்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.



அதிபர். திரு. ம. மணிசேகரன்
B.sc, PG Dip.in Ed.M.Ed (SLPS-I)

### சேவை விபரம்

01.01.1990 – 31.07.1992
ICRC திருகோணமலை – இடம்பெயர்ந்தோர் குடிசை அமைக்கும் திட்டம்

01.08.1992–16.10.1994
கிளி/கனிஷ்ட வித்தியாலயம்,
கிளி/இந்துக்கல்லூரி கிளிநொச்சி – ஆசிரியர்
[அரச அதிபர் நிதிய நியமனம்]

17.10.1994 – 24.02.1999
பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி
[தேசிய பாடசாலை] ஆசிரியர்

25.02.1999 – 15.08.1999
யா/அளவெட்டி அருணோதய கல்லூரி – ஆசிரியர்

16.08.1999 – 31.12.2008
யா/மகாஜனக் கல்லூரி – ஆசிரியர்

01.01.2009 – 02.10.2012
யா/மகாஜனக் கல்லூரி – உப அதிபர்

03.10.2012 – 26.01.2014
யா/மகாஜனக் கல்லூரி – பிரதி அதிபர்

27.01.2014 – 24.05.2024
யா/மகாஜனக் கல்லூரி – அதிபர்



### வாழ்த்துச் செய்தி

வலிகாமம் வலயத்தில் அமைந்துள்ள பல பாடசாலைகள், கல்லூரிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியானது மிகவும் பழமையானதும் பல கல்விச்சாதனைகள் நிறைந்ததுமான ஒரு கல்லூரியாகும். இக் கல்லூரியில் கடமையாற்றிய பல அதிபர்களின், ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவை வரிசையில் 1999ஆம் ஆண்டிலிருந்து பல பதவிகளை வகித்து 2014ஆம் ஆண்டிலிருந்து அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்ற திரு.ம.மணிசேகரன் அவர்களின் சேவைக்காலமான பத்து ஆண்டுகள் குறிப்பிடத்தக்க கல்விச் சாதனைகளை ஈட்டியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

திரு. ம. மணிசேகரன் அவர்களின் தூரதரிசனத்தோடு கூடிய கல்விச் செயற்பாடுகள் இக்கல்லூரியினதும் மாணவர்களினதும் கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகள், கலை, கலாசார செயற்றிறன் மற்றும் விளையாட்டுப் பிரிவுகளில் ஏற்படுத்தியுள்ள வளர்ச்சியினை மாணவர்களின் கல்விசார் முன்னேற்ற அடைவு மட்டங்களுக்கூடாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தான் கல்வி கற்ற கல்லூரியிலேயே அதிபராகச் சேர்ந்து தன்னை முழுமையாக கல்விப் பணிக்கே அர்ப்பணித்து, ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் அப்பிரதேச சமூக சேவையாளர்கள் யாவரையும் ஒன்றிணைத்து கல்லூரியின் பெருமையைத் தக்க வைத்துள்ளார்.

கல்விப் பணியில் இவர் ஆற்றிய சேவைகளுக்காக இவரை வாழ்த்துவதோடு இவரின் அரசசேவையின் பின்னரான ஓய்வுகால வாழ்க்கை மிகவும் ஆரோக்கியமும் சந்தோஷமும் நிறைந்து விளங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனின் அருளாசிகள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

இ. இளங்கோவன், பிரதம செயலாளர்,
வடமாகாணம்.



### வாழ்த்துச் செய்தி

மகாஜனவின் வரலாற்றில் 2014 தொடக்கம் அதிபர் பதவியை 10 ஆண்டுகள் வகித்து சேவையிலிருந்து இளைப்பாறும் திரு.மங்களம் மணிசேகரன் அவர்களின் சேவை சிறப்பானது. குறிப்பாக பாடசாலையின் பல்துறை வளர்ச்சியில் திரு.மணிசேகரன் அவர்களின் பங்கும் பணியும் பாராட்டுதலுக்குரியது. தனது பதவிக்காலம் முழுவதும் பெரும்பாலான நேரத்தைப் பாடசாலையின் நலனுக்காகச் செலவிட்டதை நான் அறிவேன்.

பாடசாலையின் எந்தவொரு செயற்பாட்டிலும் தன்னைக் களத்தில் ஈடுபடுத்தி, நேர்க்கணிய சிந்தனையினூடாக ஆசிரியர்களையும் அலுவலர்களையும் மகிழ்ச்சியாகப் பணியாற்றத் தூண்டி, பாடசாலையினை முன்னிலைக்குக் கொண்டுவந்து தனது சேவையிலிருந்து இளைப்பாறுகின்ற வேளையில் அவருக்கான மணிவிழா மலர் வெளியீடு பெறுமதியான ஒன்றாகும். உங்கள் பாடசாலைச் சமூகம் உங்களை வாழ்த்துகிறது என்பது உங்கள் பணியின் வெற்றியாகும். சிறப்பு மகிழ்ச்சி.

திரு.செல்வரட்ணம் சந்திரராஜா,
வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர்
(ஓய்வுநிலை),
(23.01.2013-17.04.2019 வரை).



### வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஒரு பாடசாலையின் கௌரவம்,வளர்ச்சி மற்றும் பண்பியல் முறைகளைப் பாதுகாத்து சிறந்ததொரு பாடசாலைக் கலாசாரத்தினை கட்டியெழுப்பும் பொறுப்பானது அதிபரையே சாரும். அவ்வகையில் திரு .ம. மணிசேகரன் அவர்கள் மாணவனாக, ஆசிரியனாக, பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக பரிணமித்து தன் வாழ்நாளின் பெரும் பகுதியை இக் கல்லூரிக்கே அர்ப்பணித்த "சிறந்த மகாஜனன்" எனில் அதுமிகையில்லை.

"உலகை மாற்ற நீங்கள் பயன்படுத்தக் கூடிய மிகச் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி" என தென்னாபிரிக்க ஜனாதிபதியாக இருந்த திரு.நெல்சன்மண்டேலா குறிப்பிடுகின்றார். அக்கல்வியில் மட்டுமன்றி இணைபாடவிதான செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் மாணவர்களைப் பங்குபெறச் செய்து பாடசாலையின் பெருமையினைத் தேசிய ரீதியில் அடையாளப்படுத்தியுள்ளார் எனில் அவரது வினைத்திறன் மிக்க தலைமைத்துவத்தின் பங்கு நன்கு புலப்படுகின்றது. அவரது சேவைக்காலமானது பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய "பொற்காலம்" ஆகும்.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளராக நான் கடமையாற்றிய காலப்பகுதியில் எனக்கும் அதிபருக்குமான அறிமுகம் ஏற்பட்டதெனலாம். அக் காலப்பகுதியில் அரச நிதியீட்டங்களைப் பெற்றுக் கொடுத்து பாடசாலையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை இணைந்து மேற்கொண்டிருந்தோம். மேலும் தெல்லிப்பழை பிரதேச செயலகம் சார்ந்த பல நிகழ்வுகளை இப் பாடசாலையில் நிகழ்த்துவதற்கு அதிபர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் பல வழிகளிலும் தம்மாலான ஒத்துழைப்பினை நல்கியிருந்தனர். அனைத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஒரு நாட்டிற்கு பயன் தரக்கூடிய ஆக்கபூர்வமான எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதே கல்வியின் அடிப்படை நோக் கம்" என்பதை சிரமேற்கொண்டு சிறப்புறப் பணியாற்றி ஓய்வுபெறும் திரு.ம.மணிசேகரன் அதிபர் அவர்களின் ஓய்வுகாலம் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ச.சிவஸ்ரீ, பிரதேசசெயலாளர்,
வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.



### வாழ்த்துச் செய்தி


இன்றைய நாளில் மணிவிழாக் காணும் திரு. ம. மணிசேகரன் அவர்கள் எமது வலி. வடக்கு பிரதேசத்தின் கல்வி சார் ஆளுமைகளில் முக்கியமானவர்களில் ஒருவராக விளங்குபவர் என கூறின் அது மிகையாகாது. மகாஜனக்கல்லூரியின் மகத்தான பல சாதனைகளுக்கு அத்திபாரமாக இவர் விளங்கி வந்தமை கண்டு நாமும் பூரிப்படைகின்றோம்.

இன்று எமது வலி. வடக்கு பிரதேசத்தில் குறிப்பாக மகாஜனக் கல்லூரியில் கற்று வெளியேறி உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்துவரும் பழைய மாணவர்கள் தம்மை "மகாஜனன்" என தம்மை அடையாளப்படுத்தி கொள்வதில் பெருமைகொள்கிறார்கள் என்றால் அதற்கு இக்கல்லூரித்தாயினை வளர்த்தெடுத்த அதிபர்களின் பங்கு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது அனைவருக்கும் நன்கு புரியும். அப்பங்கினை எமது மணிவிழா நாயகர் அவர்களும் மிகச்சிறப்பாகவே செய்திருக்கிறார்.

கடந்த ஒரு தசாப்த காலமாக இக்கல்லூரியை திரு.ம.மணிசேகரன் அவர்கள் அதிபராக பொறுப்பெடுத்தது முதல் கற்றல், கற்பித்தல், விளையாட்டு மற்றும் கலை, இலக்கிய புறவிதான செயற்பாடுகளில் பல சாதனைகளை நிலைநாட்டி வலி.வடக்கில் உள்ள பாடசாலைகளுக்குள் முதன்மையானதாக விளங்கி வருகின்றமை எமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

நிறைவாக, தனது தன்னலமற்ற கல்விச்சேவையை அள்ளி வழங்கி அகவை அறுபதிலும் ஆற்றல்மிக்க அதிபராக பணியாற்றி மணிவிழாக் காணும் நாயகர் திரு. ம. மணிசேகரன் அவர்களை வாழ்த்தி ஓய்வின் பின்னும் தான் சார் சமூகத்திற்கும் தன்னாலான பொதுச் சேவைகளை வழங்கி, இன்னும் தன் மனை மக்களுடன் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ இறைவனை வேண்டி நிற்கிறேன்

சிவகெங்கா சுதீஸ்னர்,
பிரதேச செயலாளர்,
வலி. வடக்கு,தெல்லிப்பழை.



### ஆசிரியர் நலன்புரிக் கழகத்தின் வாழ்த்துச்செய்தி

மகாஜனக்கல்லூரியின் அதிபர் பதவியினை அலங்கரித்த புகழ்பூத்த அதிபர்களின் வரிசையில் திரு.ம.மணிசேகரன் அவர்களும் ஒருவர். அவரது பத்தாண்டு அதிபர் சேவை மகாஜனவின் பொற்காலம் என்றால் மிகையாகாது. அதிபர் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். பல் துறை ஆளுமைமிக்க அதிபராக கல்லூரியைக் கல்விச் செயற்பாடு களிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முதன்மை பெற அரும்பாடுபட்டு வெற்றி கண்டவர். அவரது அர்ப்பணிப்பு மிக்க சேவையினால் மகாஜனக் கல்லூரியை வலிகாம கல்வி வலயத்தின் முதல்நிலை பாடசாலையாக மட்டுமன்றி தேசிய மட்டத்திலும் பல சாதனைச் சிகரங்களை தொடவைத்தார்.

அதிபர் அவர்கள் அன்பும், கருணையும், மனிதநேயமும் கொண்ட ஒருவராக கல்லூரியை வழிநடத்துவதில் வெற்றி கண்டார். இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அரவணைத்துக் கல்லூரியை வெற்றிப்பாதையை ஈட்டிச் செல்ல முடிந்தது.

தனது ஓய்வின் பின்னும் மகாஜன வீழ்ந்து விடக்கூடாது என்னும் உயரிய மனப்பாங்கோடு கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்காகத் தனது சேவைக்காலத்தில் பல்வேறு தீர்க்கதரிசனமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து ஓய்வு பெறு கின்றார். அவர் தனது குடும்பத்தை நேசித்ததைக் காட்டிலும் கல்லூரியை பல மடங்கு நேசித்தார் என்பதற்கு அவரது சாதனைகளே சான்றாக உள்ளன. அவரது சேவையை இதயபூர்வமாக வாழ்த்துவதோடு ஓய்வின் பின்னும் மகாஜனன் என்ற உரிமையோடு கல்லூரியின் வளர்ச்சிக்குப் பக்க பலமாக இருக்க வேண்டும் என பணிவன்பாக கேட்டுக்கொள்வதோடு, ஓய்வுக் காலத்தில் உடல், உள ஆரோக்கியத்தோடு கல்லூரிக்கும் சமூகத்திற்கும் பணியாற்ற எல்லாம் வல்ல ஆனந்த நடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

திரு. ந. திலகராஜ், தலைவர்,
ஆசிரியர் நலன்புரி கழகம்,
மகாஜனக் கல்லூரி.

(சி-483)

**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்**
**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-பாகிஸ்தான் ரி-20 குறிவைக்கும் தீவிரவாதிகள்

## சுவரொட்டிகளால் பரபரப்பு




இருபது-20 உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தியா-பாகிஸ்தான் போட்டியன்று பயங்கரவாத தாக்குதல்கள் இடம் பெறலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நியூயோர்க்கில் இரத்தக்களறி ஏற்படலாம் என சுவரொட்டி ஒன்று வெளியானதை தொடர்ந்து பயங்கரவாதத் தாக்குதல் குறித்த அச்சம் மக்களிடையே எழுந்துள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ்க்கு ஆதரவான குழுவினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட ஒரு வரைபடம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதில் ஒரு முகமூடி அணிந்த மனிதன் தோளில் துப் பாக்கியுடன் இருக்கின்றான்.


அதில், "நீங்கள் போட் டிக்காக காத்திருங்கள்... நாங்கள் உங்களுக்காக காத்திருக்கிறோம்..." என தகவல் வெளியாகியுள்ளது. மேலும் அந்த சுவ ரொட்டியில், நசவ் விளை யாட்டரங்கில் ஜூன் 9 ஆம் திகதி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அன்றைய தினம் மிகவும் எதிர்ப்பார்ப்பு மிக்க போட்டியான இந்தியா- பாகிஸ்தான் போட்டி நடைபெறவுள்ளது. நாசாவ் கவுண்டியின் ஐசன்ஹோவர் பூங்கா வில் உள்ள கிரிக்கெட் ஸ்டேடிய த்தின் மீது வெடிமருந்து நிரப்பிய ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதனையடுத்து போட்டி நடைபெறும் மைதானம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை ட்ரோ ன்கள் பறப்பதற்கு தடை விதித்தும் உத்தரவு பிறப் பிக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக மார்ச் மாதம், ஐஎஸ்ஐஎஸ்-கே பயங்கரவாதிகள் ரஷ் யாவின் மாஸ்கோ இசைக் கச்சேரி அரங்கில் தாக்குதல் நடத்தியதில் சுமார் 130 பேர் கொல்லப்பட்டு இரு ந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி-6)

### நோர்வே செஸ் தொடர்

# கார்ல்சனை வீழ்த்திய பிரக்ஞானந்தா




நோர்வே செஸ் தொடரின் மூன்றாவது சுற்றில், உலகின் நம்பர் வன் வீரரான கார்ல்சனை, இந்தியாவின் பிரக்ஞானந்தா வீழ்த்தினார். "கிளாசிக்கல்" முறையில், கார்ல்சனை, பிரக்ஞானந்தா வீழ்த்துவது இதுவே முதன்முறை ஆகும்.

நோர்வேயில் சர்வதேச செஸ் தொடர் நடக்கிறது. ஐந்து முறை உலக சம்பியன் கார்ல்சன் (நோர்வே), நடப்பு உலக சம்பியன் டிங் லிரென் (சீனா), இந்தியாவின் பிரக்ஞான ந்தா உட்பட 6 பேர் ஓபன் பிரிவில் பங் கேற்கின்றனர்.

ஒவ்வொரு சுற்றிலும் இரு முறை மோத வேண்டும். இதன் முதல் சுற்றில் வெற்றி பெற்ற பிரக்ஞானந்தா, இரண்டாவது சுற்றில், டிங் லிரெனிடம் தோல்வி கண்டார்.

இந்நிலையில், நேற்று மூன்றாவது சுற்றில் கார்ல்சனை எதிர்கொண்டார். இதில் வெள்ளை காய்களை கொண்டு விளையாடிய பிரக்ஞானந்தா, அபாரமாக செயல்பட்டு கார்ல்சனை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம், 5.5 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறினார். (ரி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3131

**ஹரின்**

நம்ம கடையில குளிக்குற சோப்பு இருக்கா?



இல்லை... வீட்டுக்கு வாங்கிட்டு போய் பாத்ரூம்ல குளிக்கிற சோப்பு தான் இருக்கு

**அசானி**

விளம்பரத்தை பார்த்து வாங்கிய பொருட்களை விட



பக்கத்து வீட்டில் இருப்பதை பார்த்து வாங்கியவர்கள் தான் அதிகம்...


**டொரின்**



சோற்றுக்காக தான் வேலை என்பது நன்கு தெரிந்திருந்தும், நேரம் ஆகி விட்டதென சாப்பிடாமல் வேலைக்கு போவான் பாருங்க... அவன் தான் பாவப்பட்ட நடுத்தர வர்க்கம்!

**நிருபன்**

உன்னை நாளை காலை 7 மணிக்கு தூக்கில் போட உத்தரவிட்டுள்ளேன்... ஏண்டா சிரிக்கிறாய்?




நான் எழுந்திரிக்கவே 10 மணி ஆகும்...

**வைஷ்னவி**

மந்திரியாரே ஏன் அவனை அடித்தீர்கள்? மன்னா நம்ம இராணுவ இரகசியத்தை வெளியில் சொல்லி விட்டான்...



நம்மிடம் தான் இராணுவமே கிடையாதே... அதை தான் சொல்லி விட்டான்...

**ராதிகா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்வையடி

## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த

## பொங்கல் விழாச் சிறப்பிதழ் - -31.05.2024

## வில்வையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை



**வில்வ மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை**
**அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை**
**பொல்லா வினையகல-- புங்கங்குளத் தூர் புகுந்து**
**கல்லும் கசிந்து ருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.**

**அம்பாளின் அருட்பார்வை**

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக் கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்ம னின் அருளாட்சியே ஆகும். ஆனால் இந்தப் புங்கங்குள அம்மனின் அருட் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இன்றைக்கு சுமார் 58 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விட த்தில் தோன்றியிருப்பதை அடியா ர்கள் அறிந்து கொள்வார்கள்.

**அம்பிகையின் தெய்வீகப் புதுமை**

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்த தும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவசநிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டு வந்து வைக்கின்ற பால், பழங்கள் , மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாத போது இங்கு நடக்கிறதோர் இனந் தெரியாத தெய்வீக நடமாட்டம் , அம்பா ளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்க ளினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர் க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமை தியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.

**அம்பிகையின் அருட்தோற்றம்**

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச் சொழுங்கை. அறிவும் ஆற்றலும் தெய் வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ் ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப் புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது. அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வ மரம். இந்த மரத்தின் அடியிலே தான் அம்பாளின் வதிவிடம் தென் படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியி ருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட் தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவை கள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆல யத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப் போக்கில் அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார் கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறிய தானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோ ங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

**நம்பியே கை தொழுவோம் நாம்.**

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்வை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

**மேன்மை கொள் சைவ நீதி**
**விளங்குக உலகமெல்லாம்**
**அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்**
**நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே**

**கே. வைத்திலிங்கம்** (சி-490)

**பொங்கல் விழா சிறப்புற பிரார்த்திப்போரும்**
**விளம்பர அனுசரணையாளர்களும்**


கட்டடப் பொருட்கள்,உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர் உதிரிப் பாகங்கள் விநியோகஸ்தர்.
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**இளவரசி சேலைச் சோலை**
(பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்ஜியம்)
125, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 2503

**புதிய தம்பிப்பிள்ளை அன் சண்**
இல 54. புங்கன்குளம் வீதி. கொழும்புத்துறை.
சகல விதமான கால்நடைத் தீவனங்களும் மருந்து வகைகளும் கோழிக்குஞ்சுகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

**Vannam's studio**
We capture All Kind of Events
Punkankulam Jaffna.
077 352 1838

வில்வையடி,
**ஸ்ரீநாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட் தயாரிப்பு:T.S.நாதன்
இல.96/1 , ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே-021 222 0542

**மஹா விஷ்ணு ஹாட்வெயார்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
712, மாம்பழம் சந்தி. T.P. 077 905 0185
510,நாவலர் வீதி,நல்லூர்.T.P.077 905 0185
புங்கன்குளம் சந்தி. T.P. 077 847 0341

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்- க.முருகேந்திரன்.
174. ஆரியகுளத்தடி. பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம்.

**மாருதி**
ரேடிங் சென்ரர்
16A. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
T.P- 021 222 2932

**தம்பிப்பிள்ளை அன் கோ**
**Thambippillai & Co**
(கால்நடை தீவனங்கள். மருந்து வகைகள். கோழிக்குஞ்சுகள் விற்பனையாளர்கள்)
343,கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே.021 222 3353.

உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட சிறந்த ஸ்தாபனம்.
**உதயா ஜுவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
79 G, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P. 021 222 4434

**Munchee** பிஸ்கட், **Ritzbury** சொக்லேட் ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்கள்.
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
22. மானிப்பாய் வீதி. மருதனார்மடம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
**சானுகா நகைமாடம்**
64. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 3700

**நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்**
**NEW LUCKY HARDWARES**
343, Kandy Road, Ariyalai,Jaffna.
T.P-021 373 4432,077 237 8062

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக் கொள்ள
**பூரணி நகைமாடம்**
46. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.தொ.பே 021 222 3121

**AGSHARA ENTERPRISES**
**VANNAM'S DISIRIBUTOR**
kanagarayan Kulam North, vavuniya.
T.P. 077 352 1838, 077 964 0500

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜுவல்லர்ஸ்**
158, 193, கஸ்தூரியார் வீதி.
தொ.பே- 021 222 8334

**BANUJAN SAW MILL**
**STATE APPROVED TIMBER DEALER**
NO.48, Punkankulam Road, Jaffna.

நவீன டிசைன்களில் நாகரிகத்திற் கேற்ப தங்கப் பவுண் நகைகளை நியாயமாகச் செய்து கொள்ள
**சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்**
177 B, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
66,சந்தனமாதா கோவில் லேன். அரியாலை.
தொ.பே- 077 787 7760

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
இல. 105. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 6953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினருக்காக காணி சுவீகரிப்பதை நில அளவைத் திணைக்களம் நிறுத்த வேண்டும்

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

**யாழ்.மாவட்டத்தில் படையினரின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் நிறுத்த வேண்டுமென யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இத் தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் ஆகியோரின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்,

காணி சுவீகரிப்பு தொடர்பிலும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களை நிறுத்த வேண்டிய அவசியம் குறித்து கருத்து வெளியிட்டார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் படையினருக்காக பொது மக்களின் காணிகளை சுவீகரிக்க தொடர்ந்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய இன்றும் (நேற்று)கூட சுழிபுரத்தில் மக்களின் காணிகளை படையினருக்கு சுவீகரிக்கும் நோக்கில் நில அளவீடு செய்ய இருந்தனர்.

எனினும் காணி உரிமையாளர்கள் பொது மக்கள் திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியதால் காணி அளவீடு செய்ய அங்கு வந்திருந்த நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றிருக்கின்றனர்.

இவ்வாறு பல இடங்களிலும் காணி அளவீடு செய்ய வருகின்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

ஆனாலும் பொது மக்களின் காணிகளை படையினருக்கு வழங்க முடியாது. அத்தோடு படையினருக்கு சுவீகரிக்கும் நோக்கில் அளவீடு செய்வதையும் நிறுத்த வேண்டும் என்பதுடன் தீர்மானமொன்றை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது படையினரின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதை தற்காலிகமாக நிறுத்துமாறு நில அளவைத் திணைக்களத்தினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்தார்.

இதனையடுத்து யாழ்.மாவட்டத்தில் படைகளின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் அத் தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ( நி-6)



தெல்லிப்பழை யா/மகாஜனக் கல்லூரியின் 'மகாஜனன் மலர்' வெளியீட்டு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் முதல்வர் ம.மணிசேகரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பழையமாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- ஈச்சமோட்டை செய்தியாளர்)

# இராசிபலன்

31.05.2024
வைகாசி 18 , வெள்ளிக்கிழமை
அட்டமி முற்பகல் - 8.55 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு - 4.09 மணிவரை
சுபநேரம் -5.52-7.22 மணிவரை
இராகுகாலம்-10.22-11.52 மணிவரை
அட்டமி, நவமி

சந்திராஷ்டமம் - புநர்பூசம்

**வளவன்**

**மேஷம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள்.

**துலாம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, புதிய முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவுப் பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்** உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வழிபாடு மகத்துவம் தரும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உடல் நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், எதிரிகள் உதிரியாகும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், கௌரவமான நாள்.

**தனுசு** பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

[illegible] விடாது துரத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரம்பேசும் அரசியல் இனியும் வேண்டாம்!

## பொதுவேட்பாளர் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் வாக்குகள் இத் தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடி மக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து கூட்டாகத் தீர்மான மொன்றினை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப் பதற்குமான எமது உடன்பாட்டினை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இன வழிப்புப் பொறிமுறைகளிற்குள் சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் விடுதலைப் பயணத்தில் இத்தேர்தல் களத்தினை தங்கள் நலன்சார்ந்து எவ்வாறானதாகக் கையாள வேண்டும் என்பதில் கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து இனியாவது சுதாகரித்து முன்நகர வேண்டிய அவசியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் சாணக்கியம், ராஜதந்திரம் என்னும் பெயரில் வெற்று வாக்குறுதிகளை மாத்திரமே நம்பி தமிழ்த் தரப்புக்களால் முன்னெடுக்கப்படும் பேரம் பேசும் இணக்க அரசியலினால் தமிழினவழிப் பிலிருந்து தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தையேனும் காப்பாற்ற முடியவில்லை என்பதோடு, தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியற்கட்சிகளும் உதிரிகளாக்கப்பட்டுள்ளமையும் அது உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனநிலையினை மக்களிடையே விதைப்பதிலுமே வெற்றியடைந்துள்ளது.

இனியாவது ஏமாற்று கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித் தரப்புக்களுக்கோ சென்று சேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை தமிழ் அரசியற் தரப்புக்கள் மேற்கொள்ளத் தவறுமேயானால் நாம் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

ஸ்ரீலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல் இரண்டும் ஒரே கருத்தியலின் இருவேறுபட்ட பிரயோக வடிவங்களே. தமிழர்களால் அளிக்கப்படாத வாக்குகள் மற்றும் பொது வேட்பாளருக்கு வழங்கப்படும் வாக்குகள் என இரண்டுமே சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதத்தின் முகவர்களை நிராகரிக்கும் வாக்குகளேயாகும்.


பொதுவேட்பாளர் எனும் எண்ணக்கரு நடைமுறையில் வெற்றி, தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

எனவே தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து கூட்டாகத் தீர்மானமொன்றினை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப்பதற்குமான எமது உடன்பாட்டினை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம்.

தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ்மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தமிழ் அரசியற்கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றினைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம் என்றுள்ளது. (நி-6-33)

# சுழிபுரத்தில் காணி சுவீகரிப்பு

## பொதுமக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுழிபுரம்-திருவடி நிலையில் காணி சுவீகரிப்பு முயற்சி மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டது.

சுழிபுரம்-திருவடி நிலையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமிற்கு பொது மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் நேற்று நில அளவை திணைக்களத்தினர் சென்றிருந்தனர்.

இதனையடுத்து காணி உரிமையாளர்கள்,அப் பகுதி மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஒன்று திரண்டு காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந் நிலையில் அங்கு வருகை தந்த நில அளவை திணைக்களத்தினர் காணி அளவீடு செய்யாமல் அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளனர்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி க.சுகாஷ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஜெனீவாவின் பிரேரணையால் சிக்கலில் இலங்கை இராணுவம்

## அச்சம் வெளியிட்ட பாதுகாப்புத்துறை

(கொழும்பு)

ஜெனீவாவினால் கொண்டுவரப்பட்ட 46/1 பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதால் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற உலகளாவிய அதிகார வரம்பின் கீழ் இலங்கை இராணுவ வீரர்களுக்கு எதிராக எந்த நாடும் வழக்குத் தொடரக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு என தேசிய பாதுகாப்புத்தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சரத் வீரசேகரதெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை தொடர்ந்தால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக நாட்டுக்கு பெரும் நெருக்கடிகள் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் குறிப்பிடுகையில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என்பவற்றின் உயர் அதிகாரிகள், சட்டமா அதிபர் உள்ளிட்டோருக்கு எதிர்வரும் ஜுன் 5ஆம் திகதி தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.


அன்றைய தினம் ஜெனீவாவில் 46/1 பிரேரணைக்கமைய ஸ்தாபிக்கப்பட்டுள்ள வெளிக்கள பொறிமுறை மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக சாட்சிகளை சேகரிப்பதற்கான நடவடிக்கைகளே குறித்த வெளிக்கள பொறிமுறையூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிரேரணையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள போதிலும், அதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டால் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற உலகளாவிய அதிகார வரம்பின் கீழ் எமது இராணுவ வீரர்களுக்கு எதிராக எந்த நாடும் வழக்கு தொடரக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என அவர் தெரிவித்தார். (நி-6)


மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

திருமதி. பூமகள் வரதராசா



Best Wishes

சேவை விபரம்

யா/அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை
21.10.1988-26.05.1996
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்
27.05.1996-14.10.1996
முல்/பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலை
15.10.1996-08.07.1997
கிளி/வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம்
09.07.1997-17.10.2000
கிளி/குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம்
18.10.2000-10.01.2002
கிளி/வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம்
11.01.2002-31.12.2002
யா/அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை
01.01.2003-19.06.2013
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை
20.06.2013-31.05.2024

எமது வித்தியாசாலையில் பதினொரு வருடங்களாக ஆரம்பப்பிரிவு ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றி 31.05.2024 இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி. பூமகள் வரதராசா அவர்கள் ஓய்வு காலத்தில் நல் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளோடும் மகிழ்ச்சியோடும், நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

(027)

பாடசாலைச்சமூகம்,
யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி 16 வயதான மாணவி சாதனை



(நேபாளம்)
சர்வதேச எவரெஸ்ட் தினத்தை முன்னிட்டு, மும்பையைச் சேர்ந்த 'காம்யா கார்த்திகேயன்' என்ற 16 வயதான பாடசாலை மாணவியொருவர் நேபாளத்திலுள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

இதன்மூலம் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய இளம் வயது இந்தியர் என்ற பெருமையைக் குறித்த மாணவி பெற்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவிக்கு நேபாள பிரதமர் தமது வாழ்த்தினைத் தெரிவித்துள்ளார். (நி-6)

## டில்லியில் வரலாறு காணாத வெப்பநிலை

## பீகாரில் பாடசாலைகளுக்கு விடுமுறை

(டில்லி)
இந்தியாவின் தலைநகர் டில்லியில் வரலாறு காணாத வெப்பநிலை பதிவாகியுள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட இந்தியாவில் பெரும் பாலான பகுதிகளில் 50 டிகிரி செல்சியஸ் வரை வெய்யில் பதிவாகக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தண்ணீர் தட்டுப்பாடு குறித்து மாநில அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், அங்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டில்லியில் குடிநீரை பயன்படுத்தி கார்களைக் கழுவுதல், வீட்டுப் பயன்பாட்டிற்கான குடிநீரை வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் மற்றும் நிரம்பி வழியும் நீர்த் தொட்டிகள் முதலான செயற்பாடுகளுக்கு இந்திய மதிப்பில் 2000 ரூபா அபராதம் விதிக்கப்படும் என டில்லி அரசு அறிவித்துள்ளது.

காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட வெப்ப அலைகள் உக்கிரமடைந்தமையே இந்நிலைமைக்கான காரணம் என குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில் பீகாரின் செய்க்புரா என்ற பகுதியிலுள்ள பாடசாலையில் வெப்ப அலையை தாங்க முடியாத மாணவிகள் சிலர் அடுத்தடுத்து மயங்கி விழுந்த சம்பவமும் பதிவாகியுள்ளது.

வெப்ப அலையின் தாக்கம் காரணமாக பீகார் மாநிலத்தில் எதிர்வரும் ஜூன் 8 ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு உடனடியாக விடுமுறை வழங்குமாறு பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் உத்தரவிட்டுள்ளார். (நி-6)

# இராட்சத பலூ

## தென்கொரியாவுக்கு குப்பைகள

(பியாங்யாங்)

**வடகொரியா ஏராளமான இராட்சத பலூன்களை குப்பைகளுடன் தென்கொரியா எல்லைக்குள் அனுப்பி வைத்துள்ளது.**

இரு நாட்டின் எல்லையில் அமைந்துள்ள தென்கொரியா பகுதிகளுக்குள் ஏராளமான பலூன்கள் இவ்வாறு பறந்து வந்துள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த பலூன்கள் சுமந்து கொண்டு வந்த பையில் குப்பைகள், பிளாஸ்டிக் போத்தல், பட்டரிகள், ஷூ பகுதிகள், சாணம் இருந்தாக அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி தென்கொரியாவை அச்சுறுத்தி வருகிறது.

அமெரிக்காவுடன் இணைந்து போர் ஒத்திகை மேற்கொள்ளும்போது, இவ்வாறு ஏவுகணைகளை செலுத்தி தென்கொரியாவின் மீது எச்சரிக்கை விடுத்து வருவது வழக்கம்.

வடகொரியாவின் இந்த செயல் சர்வதேச சட்டத்தை மீறுவதாக தெளிவாக தெரிகிறது. மேலும் தென்கொரிய மக்களுக்கு எதிராக தீவிரமான பாதுகாப்பு மிரட்டல் எனவும் தென்கொரிய அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்த மனிதாபிமானமற்ற மற்றும் மிகவும் தரம்தாழ்ந்த செயலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என கடு

## கலைக்கப்பட்ட பிரித்தா

## 5 வாரங்களில் எ

(லண்டன்)
பிரித்தானிய பாராளுமன்றம் உத்தியோகபூர்வமாக நேற்று வியாழக்கிழமை கலைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பொதுத் தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி நடத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதன்படி பிரித்தானிய பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் கடந்த 24 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



## ஐ.நா வின் ஆன்மா இறந்து விட்டது

## விமர்சித்த துருக்கிய ஜனாதிபதி



(அங்காரா)
ஐ.நா-வின் ஆன்மா காசாவில் மாண்டுவிட்டதாகவும், தனது சொந்த ஊழியர்களை கூட அதனால் பாதுகாக்க முடியவில்லை எனவும் துருக்கி நாட்டின் ஜனாதிபதி எர்டோகன் விமர்சித்துள்ளார்.

தெற்கு காசாவிலுள்ள ரஃபா நகரத்தில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதல் இடம்பெற்றுள்ள வேளையிலேயே, துருக்கி நாட்டின் ஜனாதிபதி தையிப் எர்டோகன், ஐ.நா அமைப்பை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ள துருக்கி ஜனாதிபதி, "ஐ.நா-வின் ஆன்மா காசாவில் மாண்டுவிட்டது.


தனது சொந்த ஊழியர்களை கூட அதனால் பாதுகாக்க முடியவில்லை. இன்னும் என்ன நடக்க வேண்டு மென காத்துக் கொண்டு உள்ளீர்கள்.


இஸ்லாமிய உலகத்துக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூன்கள் மூலம்

## களை அனுப்பிய வடகொரியா






மையாக எச்சரிக்கிறோம் எனவும் தென்கொரியா தெரிவித்துள்ளது.

எல்லை அருகில் அமைந்துள்ள ஜியோங்க்கி, கங்வோன் மாகாணத்தில் உள்ள உள்ளூர் அரசு நிர்வாகிகள், அடையாளம் தெரியாத பொருட்கள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும், வெளியில் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளனர். (நி-6)

# காசாவின் முழு நிலப்பரப்பும் இஸ்ரேலின் பிடியில்



(ஜெருசலேம்)

எகிப்தின் எல்லையில் ஒரு சிறிய பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியுள்ளதை தொடர்ந்து காசாவின் முழு நிலப்பரப்பும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

இஸ்ரேலிய படையினர் குறிப்பிட்ட பகுதியை கைப்பற்றியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.


காசா பள்ளத்தாக்கிற்கும் எகிப்திற்கும் இடையில் உள்ள 14 கிலோமீற்றர் நீளமான பிலாடெல்பி கொறிடோரை கைப்பற்றியுள்ளதாக இஸ்ரேலின் தலைமை இராணுவ பேச்சாளர் டானியல் ஹகாரி தெரிவித்துள்ளார்.

இதுவரை இந்த பகுதி மாத்திரமே இஸ்ரேலின் நேரடிகட்டுப்பாட்டின் கீழ் இல்லாமலிருந்த பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பகுதியே ஹமாஸிற்கான உயிர்நாடியாக விளங்கியது காசாவிற்குள் ஆயுதங்களை கொண்டுவருவதற்கு ஹமாஸ் இந்த பகுதியை பயன்படுத்தியது என தெரிவித்துள்ள இஸ்ரேலின் தலைமை இராணுவ பேச்சாளர் டானியல் ஹகாரி 20 சுரங்கப்பாதைகளை அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் தனது ரபா தாக்குதலை நியாயப்படுத்துவதற்காக எகிப்திய எல்லையில் சுரங்கப்பாதைகளை கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கின்றது என எகிப்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

# தானிய பாராளுமன்றம் பொதுத்தேர்தல்



அண்மையில் பிரித்தானியாவில் நடைபெற்ற இடைத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றதுடன் பொதுத் தேர்தல் தொடர்பான பெரும்பாலான கருத்துக் கணிப்புகளில், பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடையும் என்று கூறப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து 5 வாரங்களின் பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவான முடிவை எடுக்க ஏன் தாமதம்? இஸ்ரேல், காசாவுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காசா மீதான தாக்குதலை நிறுத்துமாறு இஸ்ரேலிடம் உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில், காசா - எகிப்து எல்லை முழுவதையும் இஸ்ரேல் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

அத்துடன், எகிப்திய சினாய்க்கு செல்லும் 20 சுரங்கப் பாதைகளை இதுவரை கண்டுபிடித்துள்ளதாகவும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# காசா மீதான போர் ஏழு மாதங்கள் நீடிக்கும்

## இஸ்ரேல் திட்டவட்டம்

(ஜெருசலேம்)

காசா மீதான போர் மேலும் ஏழு மாதங்களுக்கு நீடிக்கும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் எட்டு மாதங்களாக நீடித்து வருகின்ற நிலையில் இதில் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 36 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர்.

காசாவின் ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் வரை போர் தொடரும் என்று இஸ்ரேல் தெரிவித்த நிலையில், காசாவில் உடனடியாக போர் நிறுத்தத்தை கொண்டு வரவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை உலக நாடுகளை வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் அதை இஸ்ரேல் ஏற்காமல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறதோடு தற்போது காசா மீதான போர் மேலும் ஏழு மாதங்களுக்கு நீடிக்கும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டீசச்சி ஹனேஜிபி கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஹமாஸ் அமைப்பையும் அதன் அரசாங்கத்தையும் அழிக்க எங்களுக்கு இன்னும் ஏழு மாத கால அவகாசம் தேவைப்படும்.

இதனால் போர் மேலும் ஏழு மாதங்களுக்கு நீடிக்கும் அத்தோடு எகிப்து எல்லையில் பெரும் பகுதியை இஸ்ரேல் இராணுவம் கட்டுப்படுத்துவதுடன் ஹமாஸின் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் வகையில் அனைத்தையும் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. காசாவில் சண்டை குறைந்தது இந்த ஆண்டு முழுவதும் தொடருவதுடன் பாலஸ்தீனிய கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேல் பணயக் கைதிகளை பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக ஹமாஸ் கோரியபடி போரை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேல் தயாராக இல்லை.

காசாவின் ரபா நகரில் சண்டையிடுவது அர்த்தமற்ற போர் அல்ல காசாவில் ஹமாஸ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதையும் மற்றும் அதையும் அதன் கூட்டாளிகளும் இஸ்ரேலை தாக்குவதையும் நிறுத்துவதே நோக்கம்" என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே காசா மீதான போருக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேலுக்கான தூதரை பிரேசில் திரும்ப பெற்றுள்ளதுடன் மெக்சிகோ நாட்டில் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டங்கள் நடந்து வருகிறது.

மேலும் தலைநகர் மெக்சிகோ சிட்டியில் உள்ள இஸ்ரேல் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்ததுடன் அப்போது தூதரகத்துக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்த நிலையில் இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கேய படைகளுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த மாவீரன் சங்கிலி மன்னன்

கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த குடி தமிழ் குடி என்பது வரலாற்று ஆசிரியர் துணிவு. தொன்மையும் சிறப்பும் மிக்க தமிழ் மன்னர் பரம்பரையில் வந்து உதித்த வீர மறவனே சங்கிலி மன்னன் ஏழாம் செகராஜ சேகரன் என்ற சிறப்பு பெயரை உடையவன்.

கி.பி 1519 ஆண்டு முதல் கி.பி ஆயிரத்து 561 ஆண்டு வரை யாழ்ப்பாண ராஜ்யத்தை ஆண்டவன். ஆறாம் செகராஜ சேகரன் மங்காத்தாள் இருவருக்கும் மகனாகப் பிறந்தவன். ஆரிய சக்கரவர்த்திகள் வம்சத்தில் வந்து உதித்தவன். சிறந்த சைவத் தமிழ் மன்னனாக திகழ்ந்தவன் நெற்றியில் நீறும் நிமிர்ந்த உரம் மிக்க நெஞ்சம் கையில் வீர வாளும் கண்களில் ஒளியும் கொண்ட கம்பீர தோற்றத்தை உடையவன். நல்லாட்சி நாதன்.

வலிமைமிகு காலாட் படையினையும் கடல் படையினையும் வைத்திருந்தவன். கடல் கடந்த வணிகத்தின் மூலம் பெருமளவு வருமானம் பெற்றவன். போர்த்துக் கேயரின் வணிக முயற்சிகள் நாட்டு நலனுக்கு பாதகமானது என்பதை அறிந்திருந்தவன் இதன் காரணமாக 1540களில் போர்த்துக்கேய



வணிக கப்பல்கள் யாழ்ப்பாணத்துறை முகத்திற்கு வந்த வேளை படைகளை அனுப்பி கப்பல்களையும் பொருட்களையும் பறிமுதல் செய்து பறங்கிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தவன். அவர்களை விரட்டியடித்தவன். பலம் மிக்க ஆட்சி ஒன்றை அமைத்தவன். இதன் காரணமாக போர்த்துக்கேய பறங்கிகளின் வணிகத்திற்கும் மதமாற்ற நடவடிக்கைகளுக்கும் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவன் . பிரான்சிஸ் சவேரியர் பாதிரியாரும் குரோஸ் பாதிரியாரும் மேற்கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளுக்கு படை கொண்டு பதிலடி கொடுத்தவன்.

சங்கிலி மன்னனுக்கு பாதிரிமார் இருவரும் கடும் பகையாளிகளாக இருந்தனர். யாழ்ப்பாண வரலாற்றை குறித்து வைத்த பாதிரிமார் சங்கிலியனின் வீரப்பிரதாபங்களை மறைத்து வைத்துள்ளனர்.

வரலாற்றை திரிபுப்படுத்தி எழுதியுள்ளனர். கி.பி 1544 இல் பாதிரிமர் இருவர்கள் அதும் தூண்டுதலின் பேரில் மன்னாரில் வாழ்ந்த சைவ மக்கள் பலர் கத்தோலிக்கர்களாக மதமாற்றப்பட்டிருந்தனர். இதை அறிந்த சங்கிலி மன்னன் படை அனுப்பி மதம் மாறிய யாவரையும் தண்டித்தான். இது முதல் யாழ்ப்பாணத்தரசு போர்த்துக்கேய படைகளுக்கு எதிராக எழுச்சி பெற்றிருந்தது. இந்த எழுச்சிக்கு துணையாக சிங்கள மன்னன் மாயாதுணை சங்கிலி மன்னன் உடன் கைகோர்த்து நின்றான். போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தில் நிலை கொள்ள விடாது தடுப்பதில் கடும் முயற்சி செய்திருந்தான். 1545 ஆம் ஆண்டு சீதாவாக்கை கண்டி ராஜ்ஜியங்களுடன் தொடர்பை பேணி இருந்தான். போர்த்துகேயருக்கு எதிராக படை அனுப்பி உதவிகள் புரிந்து இருந்தான்.

தமிழ் மன்னன் சங்கிலியன் ஓர் மாவீரன் என்பதை நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்தின் வயல்வெளியில் போர்த்துக் கேயர் படைகளுடன் நடந்த 10 நாள் வாள் சண்டை கட்டியம் கூறுவதாக உள்ளது. இப் போரில் 1700 இற்கும் மேற்பட்ட பறங்கிப் படைகளின் தலைகள் சங்கிலியனின் வாளுக்கு இரையாகி இருந்தன. இதைக் கண்ட பறங்கிப் படைகள் கதி கலங்கி பின்வாங்கி நின்றன. உயிரைக் காக்க ஒரே வழி சரண் புகுவதே என எண்ணி நின்றன. பதினோராம் நாள் சங்கிலி மன்னன் நானூறு பேரைக் கொண்ட படைவீரர்களுடன் மேலும் முன்னோக்கி சென்றிருந்தான். அவ்வேளை தரங்கமாபாடியிலிருந்து துணைப் படைகள் பறங்கிப் படைகளுக்கு உதவிக்கு வர அவர்கள் உற்சாகமடைந்து போராடத் தயாரானார்கள்.

அவ்வேளை மகாபாரத போரிலே மாமன்னன் கர்ணனை வீழ்த்த மாயவன் சூழ்ச்சி செய்தது போல் நய வஞ்சகம் மிக்க காக்கை வன்னியன் சங்கிலி மன்னன் உடன் நட்பு பூண்டு காட்டிக் கொடுத்து பறங்கிகளிடம் வெகுமதிகளை பெற்றிருந்தான்.

சங்கிலி மன்னன் சிறை பிடிக்கப்பட்டான். கோவா கொண்டு செல்லப்பட்டான். தூக்கில் இடப்பட்டான். மறைந்தான் மாவீரன். வீழ்ந்தது யாழ்ப்பாண ராஜ்யம். ஆண்டனர் பல நூறு வருடம் அந்நியர்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு நிகராக செயற்பட்டு தமிழையும் சைவத்தையும் கட்டிக்காத்த சங்கிலி மன்னன் புகழ் பாடுவோம். பரணி பாடுவோம். அவனது வரலாற்றை எமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வோம்.

சங்கிலி மன்னன் இறந்ததாகக் கருதப்படும் வைகாசி திங்களில் வரும் அட்டமி பூரட்டாதி திதியில் சிராத்த கிரியையினை நாட்டின் பல பாகங்களிலும் அனுஷ்டிப்போம்.

ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள வேண்டும்.அடுத்த சந்ததியினரை அதற்கு நாம் தயார் படுத்துவோம். அனைவரும் இணைவோம். அருந்தமிழ் வீரம்காப்போம்.

**என்.பி.ஸ்ரீந்திரன்,**
**செயலாளர்,**
**இலங்கை சிவசேனை.**

# இன்று ஒரு தகவல் 140



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புத்திக்கூர்மை

"கத்தியைத் தீட்டாதே புத்தியை தீட்டு" என்று ஒரு பெரியவர் புத்தி சொன்னார்.அதை கேட்ட ஒரு சின்னப் பையன் அது எப்படி பெரியவரே புத்தியை தீட்டுவது. கத்தியை தீட்டு என்றால் ஒரு கருங்கல்லிலே கத்தியை தேய்க்கலாம். புத்தியை தீட்டு என்றால் தலையை கொண்டு போய் தரையிலே தேய்த்துகொண்டு இருக்க முடியுமா என்றான்.

பெரியவர் உடனே புரிந்து கொண்டார் இந்த பையனுக்கு புத்திக்கூர்மை கம்மி என்று. அது சரி . அறிவுக்கும் புத்திசாலித் தனத்திற்கும் என்ன வித்தியாசம். இது ஒரு முக்கியமான கேள்வி. இதே கேள்வியை சாக்கிரட்டீசிடம் அவரின் சிஸ்யன் ஒருத்தன் கேட்டான். அறிவுக்கும் புத்திசாலித்தனத்திற்கும் என்ன வேறுபாடு என்று. சாக்கிரட்டீஸ் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். அதன் பின்பு சொன்னார்.

இதற்கு நான் பதில் சொல்கிறேன் அதற்கு முன்னால் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும் என்றார். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்றார். அதோ பார் அங்கே ஒரு வயதான பெரியவர் உட்கார்ந்திருக்கார் நேராக அவரிடம் போ இங்கே இருந்து பக்கத்தில் இருக் கிற கிராமத்தை போய் சேர எவ்வளவு நேரம் ஆகும் என்று அவரிடம் கேட்டு கொண்டு வா என்றார் சார்கிரட்டீஸ். சரி என்று சொல்லிவிட்டுபோனார்.

அந்த பெரியவரிடம் போய் நின்று ஏன் பெரியவரே இங்கே இருந்து பக்கத்தில் இருக்கிற கிராமத்திற்கு போய் சேர எவ்வளவு நேரம் ஆகும் என்று கேட்டான். பெரியவர் நிமிர்ந்து பார்த்தார் ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை. இந்த சிஸ்யன் மறுபடியும் அந்த கேள்வியை கேட்டான். அப்போதும் அவர் பதில் சொல்லவில்லை. சரி பெரியவர் ஒரு மாதிரியாக தெரிகி றார்!

புத்தி சுவாதீனம் இல்லாதவர் போல இருக்கிறது என்று நினைத்து கொண்டு வந்த வழியில் திரும்பி நடந்தான். கொஞ்ச தூரம் வந்த உடன் அந்த பெரியவர் இவனை கூப்பிட்டார். நீ இங்கே இருந்து பக்கத்து கிராமத்திற்கு போய் சேர 5 நிமிடம் ஆகும் என்றார். இப்ப சிஷ்யன் அவரை ஒரு மாதிரியாக பார்த்தான்.

பின்பு யோசித்தான். அப்புறம் அவரிடமே கேட்டு விட்டான். ஏன் பெரியவரே இந்த பதிலை திரும்பி போக விட்டு பின்பு கூப்பிட்டு பின்பு இப்படி சொல்கின்றீர்களே என்றார். பெரியவர் சிரித்தார் பின்பு சொன்னார். ஏனப்பா! நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதை பார்க்காமல் எப்படி நீ கிராமத்தை போய் சேர ஆக்ககூடிய நேரத்தை சொல்ல முடியும்? அதனாலே தான் உன்னை நடக்க விட்டு வேகத்தை பார்த்து அதன் பின்பு நேரத்தை சொன்னேன் என்று சொன்னார்.

சிஷ்யனாலே பதில் எதுவும் சொல்ல முடியவில்லை திரும்பி சோக்ரட்டீஸிடம் வந்தார். நடந்ததை சொன்னான். அதற்கு பேர் தான் புத்திசாலித்தனம் என்றார் சோக்கிரட்டீஸ் இந்த புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வரவேண்டும் என்பதற்காக தான் கத்தியை தீட்டாதே புத்தியை தீட்டு என்று பெரியவர்கள் எல்லாம் புத்திமதி சொல்லி கொண்டு இருக்கிறார்கள்.

இருந்தாலும்; அதை எல்லாம் யார் கேட்கிறார்கள் இந்த காலத்தில். இந்த காலத்து ஆசாமி ஒருவர் இன்னொருவரை பார்த்து கேட்டார் ஏன்க ஒரு விமானம் இங்கே இருந்து புறப்பட்டு ஒரு மணி நேரத்தில் மதுரைக்கு போய் சேர்கிறது என்றால் என்னுடைய வயது என்ன என்றார்.

இது என்ன கேள்வி இருந்தாலும் இதை கேட்டவுடனே அவர் பதில் சொன்னார். அப்படி என்றால் உங்களுடைய வயது 20 என்றார். எப்படி அவ்வளவு கரெக்டா சொல்லுகின்றீர்கள் என்றார் அவர் வேறு ஒன்றுமில்லை எங்கள் பக்கத்து வீட்டில ஒரு முழு பைத்தியம் இருக்கிறது அதன் வயது 40 என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருளுடன் கைதானவர் விளக்கமறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் இரண்டு கிராம் 100 மிலலிக்கிராம் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

கடந்த செவ்வாய்க்கிழமை திருவையாறுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக சிலர் தங்கி இருப்பது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்ட போது வீட்டில் இரண்டு கிராம் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் இருந்தமையால் குறித்த வீட்டில் தங்கி இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட்ட ஐவரை கைது செய்திருந்தனர்

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டதுடன் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கடந்த இரு நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் குறித்த வீட்டில் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த ஒருவர் அடையாளம் காணப்பட்டதுடன் பொலிஸ் உத்தி யோகத்தர் உள்ளிட்ட நான்கு பேர் குறித்த குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்

இந்த நிலையில் குறித்த அளவு கொண்ட போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியதை அடுத்து குறித்த சந்தேக நப்ரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி-6-315)



உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உலக சுற்றாடல் தின விழிப்புணர்வுக் கருததரஙகு நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் பயனுறுதி மிக்க நிலப் பயன்பாட்டின் ஊடக நலம் நிறைந்த நாடு எனும் தொனிப்பொருளில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. (படம்: தேவானந்தன், யதுபாஸ்கரன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 300 | 250-300 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 80-100 | 200 |
| தக்காளி | 300 | 200 | 200 | 150 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 150 | 100 | 200 |
| கோவா | 250 | 250 | 200 | 200 | 250 |
| கரட் | 280 | 260 | 350 | 220 | 300 |
| பூசணி | 100 | 100 | 120 | 80 | 100 |
| புடோல் | 200 | 180 | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 350 | 250 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 230 | 220 | 250 |
| பாகற்காய் | 800 | 700 | 600 | 600 | 700 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 100 | 120 | 60 | 80-100 | 100 |
| லீக்ஸ் | 320 | 350 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 400 | 600 | 300 | 600 |
| கறிமிளகாய் | 200 | 350 | 400 | 300 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 600 | 300-600 | 700 |
| போஞ்சி | 600 | 800 | 600 | 380 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 300 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 150 | 180 | 100 | 60-80 | 120 |
| தேசிக்காய் | 1200 | 800 | 1000 | 800 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 400 | 200 | 80 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 120 | 80 | [illegible] |

# 2 ஆம் சங்கிலிய மன்னன் நினைவு தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் 2 ஆம் சங்கிலியன் 405 ஆவது நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முத்திரைச் சந்தியில் உள்ள சங்கிலியன் தோப்பில் இடம்பெறவுள்ளது.

நந்திக்கொடியேற்றலுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து சங்கிலியன் சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

யாழ்.நாகவிகாரை விகாராதிபதி மீகஹ ஜந்துக ஶ்ரீ விமலதேரர், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி.ஆறு. திருமுருகன், யாழ்.இலங்கை சைவத்திருச்சபை அடிகளார். விபுலானந்தர் மற்றும் யாழ்.இந்து சமயப் பேரவை சிவஶ்ரீ. சக்தி கிரீவன் ஆகியோர் திருமுன்னிலையில், மறவன்புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஶ்ரீசாய் முரளி, இந்தியத் தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஏ.ஶ்ரீநிவாசராமன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை விரிவுரையாளர், பேராசிரியர்.க.தேவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 26<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.com, முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14561 | பிறப்பு - 1996 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 14 1/2<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: Bsc, NGO<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/12936 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 19 3/4<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: முகாமையாளர்(London)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர்கள்<br>தொ.இ: B/14565 | பிறப்பு- 1995 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: Bsc, PHD<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் பதவிநிலை உத்தியோகத்தர்கள்<br>தொ.இ: G/13339 |
| பிறப்பு:- 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>சூரி செவ் 4 இல்<br>உயரம் : 5'10"<br>தகைமை/தொழில்: Bsc, Engineer (சிங்கப்பூர்)<br>எதிர்பார்ப்பு: விஞ்ஞானத்துறை சார்ந்த பட்டதாரி<br>தொ.இ: B/14566 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 35 1/4<br>தகைமை/தொழில்: HNDA, Finance Assistant (NGO)<br>எதிர்பார்ப்பு: கனடா ஜேர்மன் அவுஸ்திரேலியா. லண்டன்.<br>தொ.இ: G/14422 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5"7"<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14569 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: A/L தாதியர்<br>எதிர்பார்ப்பு: கல்வி கற்ற அரச தொழில்<br>தொ.இ: G/14472 |

கல்யாணமாலை
இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 495



பூதத்தீவில் ஓங்கி வளர்ந்திருந்த நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் தலை விரி கோலமாக ஊழிக் காலத்தில் சம்ஹார மூர்த்தியைச் சுற்றி நின்று பூதகணங்கள் ஆடுவது போல் ஆடின. கடல் அலைகள் அத்தென்னை மரங்களின் உயரம் சில சமயம் எழும்பி இமய மலையின் பனிச் சிகரங்களைப் போல் ஒரு வினாடி காட்சி அளித்து, மறு வினாடி நூறு கோடி நுரைத் துளிகளாகச் சிதறி விழுந்தன.

சுழன்று சுழன்று அடித்த காற்றின் சப்தமும் அலைகளின் பேரொலியும் இடையிடையே கேட்ட இடி முழக்கமும் சேர்ந்து திக்குத் திகாந்தங்கள் எல்லாம் இடிந்து தகர்ந்து விழுகின்றன என்று எண்ணச் செய்தன. வானத்தை வெட்டிப் பிளப்பது போல் அவ்வப்போது தோன்றிக் கப்பும் கிளையும் விட்டுப் படர்ந்து ஓடி மறைந்த மின்னல்கள் ஒரு வினாடி நேரம் கொந்தளித்த அலை கடலையும், பேயாட்டம் ஆடிய மரங்களையும், வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டு மறுவினாடி கன்னங்கரிய காரிருளில் ஆழச் செய்தன.

இவ்வளவு அல்லோலகல்லோலங்களையும் பார்த்துக் கொண்டு பூங்குழலி வெகு நேரம் நின்றாள். அவள் உடம்பு காற்றில் ஆடிய மரங்களைப் போல் ஆடியது. அவள் கூந்தல் அவிழ்ந்து காற்றில் பறந்தது. மழை அவள் உடலை நனைத்தது. இடி முழக்கம் அவள் செவிகளைப் பிளந்தது. மின்வெட்டு அவள் கண்களைப் பறித்தது. இதையெல்லாம் அவள் பொருட்படுத்த வேயில்லை. வெகு நேரம் அக்காற்றிலும் மழையிலும் அவள் நின்றாள். அவள் உள்ளம் வெறி கொண்டு கொந்தளித்தது. தன்னைச் சுற்றிலும் நடைபெறும் அற்புத கோலாகலமெல்லாம் தான் பார்த்துக் களிப்பதற்காகவே நடப்பதாக எண்ணிப் பெருமிதத்துடன் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

இடையிடையே அவளுக்கு இளவரசர் அருள்மொழி வர்மரின் நினைவு வந்து கொண்டிருந்தது. அச்சமயம் அவர் கோடிக்கரை சேர்ந்து பத்திரமான இடத்தில் தங்கியிருப்பார் என்று எண்ணினாள். ஒரு வேளை தன் பெற்றோர் வீட்டிலே கூடத் தங்கியிருக்கலாம் அல்லது நாகப்பட்டினம் சென்று அங்கே இராஜ மாளிகையில் தங்கியிருக்கலாம். ஒரு வேளை கடலில் கப்பலிலேயே இருந்திருப்பாரோ? இருந்தால் என்ன? அவர் ஏறிச் சென்ற பெரிய மரக்கலத்தை எந்தச் சுழிக் காற்றுதான் என்ன செய்துவிடும்? அவரைப் பாதுகாக்க எத்தனையோ பேர் சுற்றிலும் சூழ்ந்திருப்பார்கள். தன்னைப் பற்றி அவர் ஞாபகப்படுத்திக் கொள்ளுவாரா? 'அந்தப் பேதை பூங்குழலி இச்சமயம் எங்கிருக்கிறாளோ?' என்று எண்ணிக் கொள்வாரா? ஒரு நாளும் மாட்டார். அவருடைய சகோதரி அனுப்பிய வந்தியத்தேவனைப் பற்றி நினைத்துக் கொள்வார். கொடும்பாளூர்க் கோமகளைப்பற்றியும் நினைத்துக் கொள்ளலாம். இந்த ஏழைக் கரையர் குலப் பெண்ணை அவருக்கு எங்கே நினைவிருக்கப்போகிறது?

இரவு வெகு நேரம் சுழிக் காற்றின் கோலாகலத்தை அனுபவித்துவிட்டுப் பூங்குழலி ஸ்தூபத்தின் அடிவாரக் குகைக்குச் சென்று கண்ணயர்ந்தாள். தூக்கத்தில் அவள் அமைதியடையவில்லை. ஏதேதோ கனவுகள் கண்டு கொண்டிருந்தாள். கடலில் படகில் சென்று வலை வீசுவது போலவும், அதில் இளவரசர் அகப்படுவது போலவும் ஒரு தடவை கனவு கண்டாள். மற்றொரு சமயம் அவளும் இளவரசரும் மீன்களாக மாறிக் கடலில் அருகருகே நீந்திப் போவதாகக் கனவு கண்டாள். ஒவ்வொரு கனவின் போதும் நடுவில் விழித்தெழுந்து, "இது என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று எண்ணி மனத்தைத் தெளிவாக்கிக் கொள்ள முயன்று மறுபடியும் உறங்கினாள். பொழுது விடிந்து அவள் நன்றாய் விழித்தெழுந்த போது சுழிக் காற்றின் கோலாகலம் ஒருவாறு அடங்கி விட்டிருந்தது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எத்தனுக்கு எத்தன்!

(நேற்றைய தொடர்ச்சி)



பணத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டான். பிறகு குதிரையின் சேணத்தில் தான் வைத்திருந்த பணப்பையை எடுக்கச் சென்றான்.

"இந்தக் குதிரையைப் பணம் கொடுத்து வாங்கிவிட்டேன். இப்போது குதிரை எனக்குச் சொந்தம். குதிரையோடு உள்ள பொருட்கள் யாவும் எனக்கே சொந்தம்" என்று கூறிவிட்டு குதிரைமேல் ஏறிச் சென்று விட்டான்.

ஆயிரம் பொற்காசுகளை இழந்த சுருதி மிகுந்த ஏமாற்றத்துடன் சத்திரத்திற்கு வந்து சேர்ந்தான். நடந்தவற்றை நண்பனிடம் கூறினான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனுடைய சோகக் கதையைக் கேட்ட ஜனா ஏளனமாகச் சிரித்தான்.

"இந்த ஊரினர் பயங்கர எத்தர்களாக இருப்பர் போலும். இருக்கட்டும். உன்னிடம் குதிரையை வாங்கியவனின் பெயர் என்ன?" என்று கேட்டான் ஜனா.

"கசாப்புக்கடை வில்லன்!" என்றான்.

உடனே நண்பனிடம் இருபத்தி ஐந்து பொற்காசுகளை வாங்கிக் கொண்டு வில்லனின் கசாப்புக் கடையின் முன்பாகப் போய் நின்றான். கடையில் நான்கைந்து ஆட்டுத் தலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. கடைத் திண்டில் வில்லனின் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன.

"ஒரு தலையின் விலை என்ன?" என்று கேட்டான். "ஒரு தலை ஒரு பொற் காசு."

"எத்தனை தலைகள் வேண்டுமானாலும் கிடைக்குமா?"

"ஆகா.... தாராளமாகக் கிடைக்கும்!"

"இதோ இருபத்தி ஐந்து பொற்காசுகள். இருபத்தி ஐந்து தலைகள் கொடு!"

"இப்போது இங்கே இருக்கும் தலைகளை எடுத்துப் போ. மீதியை நீ இருக்குமிடத்தைச் சொல். அங்கே அனுப்பி வைக்கிறேன்."

"அதெல்லாம் முடியாது. இங்கு தொங்கும் தலைகளுடன் கடையில் உள்ள உன் குழந்தைகளின் தலையையும் வெட்டிக் கொடுக்க வேண்டும். தலைகள் என்றுதான் பேசினோம். ஆட்டுத்தலைகள் என்று கூறவே இல்லை. எனக்குக் குழந்தைகளின் தலைகளையும் கொடுக்க வேண்டும்!" என்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும், அநீதிக்கு ஆளாகிநிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வர வேண்டும். —மாவோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீவகத்தின் அபிவிருத்திக்காக அம்மக்கள் போராட வேண்டும்

அடிப்படைத் தேவைகள் மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட அத்தனை விடயங்களிலும் தீவகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால் தீவகத்தில் மீளக் குடியமர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ளது.

எனினும் இதுபற்றி எவரும் கருசனை கொள்வதாக இல்லை.

அதேவேளை தீவகத்திலுள்ள சில அரச நிறுவனங்கள் பொதுமக்களை மதிப்பதில்லை. அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பொதுமக்களை அலைக்கழிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டும் பரவலாகவுள்ளது.

இருந்தும் இது தொடர்பில் கதைப்பதற்கு ஆளில்லை என்றாயிற்று.

சரி, தமிழ் அரசியல்வாதிகளாவது கதைக்கலாமே என்றால், அவர்கள் கதைப்பதாக இருந்தால் அவர்களுக்கு அதுவிடயத்தில் குறைந்தது 25 சதவீத அரசியல் இலாபமாவது இருக்க வேண்டும்.

அப்படியானால் இராணுவம் மற்றும் தென்பகுதிச் சிங்களவர்கள் சார்ந்த விடயங்களாக இருந்தால் மட்டுமே அவர்கள் கதைப்பார்கள். மற்றும்படி தமிழர் தாயகத்தில் எது நடந்தாலும் அதுபற்றி அவர்கள் வாய்திறக்கமாட்டார்கள்.

அவ்வாறு ஏதேனும் கதைத்தால், அது தங்களின் வாக்கு வங்கியைப் பாதித்து விடுமோ என்ற ஏக்கம் அவர்களுக்கு இருப்பதால், அவர்கள் தீவக நிலைமை குறித்து இம்மியும் வாய்திறக்கப் போவதில்லை என்பது வெளிப்படை.

அவர்கள்தான் கதைக்கவில்லை என்றால், தீவகத்தைச் சேர்ந்த அதேநேரம் யாழ்ப்பாணம், கொழும்பு, வெளிநாடுகளில் இருக்கக்கூடியவர்கள் தீவகத்தின் அபிவிருத்தி பற்றி சிந்தை கொண்டால் என்ன என்றால், அவர்களுக்குத் தெரிந்த அபிவிருத்தி என்பது வழிபடுவதற்கு ஆளில்லா ஊரில் கோபுரம் கட்டுவதும் குடமுழுக்குச் செய்வதும்தான்.

ஆக, தீவகம் இப்போது அங்கு குடியிருக்கும் மக்களோடு சேர்த்துப் புறந்தள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தீவகத்தில் குடியிருக்கும் மக்கள் எதிர்காலத்தில் மிகமோசமான பொருளாதார இடர்பாடுகளுக்கு ஆளாவதுடன் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார நிலைகளில் கணிசமான வீழ்ச்சியையும் சந்திப்பர்.

இதன் ஆரம்பம் மாணவி வித்தியாவின் கொலையில் இருந்து தொடங்குகிறது என்பது அவதானத்துக்குரியது.

எனவே இவை அனைத்துக்கும் முடிவு கட்டி, தீவகத்தை உயர்நிலைக்குக் கொண்டு வருவதாயின், அதற்காக தீவகத்திலுள்ள மக்கள் துணிந்து போராட வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி, அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் கட்டாயம் தீவகத்துக்கும் வருகை தந்து தீவகத்தின் சமகால நிலை குறித்து ஆராய வேண்டும்.

தவிர, தீவகத்தின் கல்வி நிர்வாகம் சீராக்கப்பட வேண்டும். இதுவிடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இதை வலியுறுத்தி தீவக மக்கள் ஜனநாயக ரீதியில் போராட வேண்டும். அப்போது தான் தீவகம் எழுச்சியும் உயர்ச்சியும் பெறும்.

# நாளைய தலைவர்களான மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உடனடியாக பணிக்கு திரும்புங்கள்

### தொழிற்சங்கங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பணிப்புரை

(கொழும்பு)

நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலம் கருதி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இம்மாதம் இரண்டாம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனைசாராப் பணியாளர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்பப் பணித்து அந்தந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அந்தக்கடிதத்தில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் போதனைசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பல இணைந்து தங்களது சம்பள முரண்பாடு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 27 நாட்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கல்விஅமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய இது தொடர்பாக பல அமைச்சரவைப் பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் தொடர்சியாக ஆராய்ந்த அமைச்சரவை, நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது. இதன் மூலம்உங்களுக்குப்பொருத்தமான தீர்வு கிட்டும் என நம்பப்படுகிறது.

தொழிற்சங்கப் போராட்டத்தினால் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நாட்டின் நற்பிரஜைகளாக உங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டு, பல்கலைக்கழகங்கள் இடையூறின்றி இயங்குவதற்காக உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது.

இதேவேளை, தங்களுடைய கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை தாம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும், இனிவரும் காலங்களில் போராட்டத்தை மேலும் வலுப்படுத்த உள்ளதாகவும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# தீர்ப்புக்கு எதிராக செயற்பட்டு நீதிமன்றை அவமதித்தார் மைத்திரி

### மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல்

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொன்டேக் சரத் சந்திரவினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டிருந்ததோடு இந்த மனு தொடர்பான சமர்ப்பணங்களை உறுதிப்படுத்துவதற்காக பிரதிவாதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரரின் சட்டத்தரணிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ள போதும், அதனை மீறும் வகையில் செயற்பட்டு நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

காசா சிறுவர்களுக்காக இரங்கும்

# இலங்கை அரசே தமிழ் குழந்தைகளை இரக்கமின்றி கொன்று குவித்தது

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் விசனம்

காசா சிறுவர்களுக்காக நிதி வழுங்கும் அரசாங்கத்திற்கு இறுதிப்போரில் தமிழ் குழந்தைகள் கொலை செய்யப்படும் போது இரக்கம் வரவில்லையா என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று (30.05) ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

சர்வதேச நீதியினைக் கோரி நாம் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எமது போராட்டங்களை தடுக்கும் விதத்தில் பல்வேறு அடக்குமுறைகள் இந்த அரசால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் நாம் நீதிக்கான எமது போராட்டங்களில் தொடர்ச்சியாக பயணிப்போம்.

இதேவேளை காசாவில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்ட காசா நிதியத்திற்கு ஜனாதிபதியால் அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது.

இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இன்னொரு நாட்டிற்கு நன்கொடை வழங்கப்படுகின்றமையினை தமக்கான ஆதரவினை பெருக்குவதற்கான ஒரு அரசியல் நகர்வாகவே பார்க்க முடியும்.

ஏனெனில் எமது தமிழ்ச் சிறுவர்கள் பலரை இறுதிப் போரின்போது கையில் ஒப்படைத்திருந்தோம்.

அதே போல இறுதிப் போரில் எத்தனை அப்பாவி தமிழ்க் குழந்தைகளை கொலை செய்தனர். அப்போதெல்லாம் இவர்களுக்கு இரக்கம் வரவில்லையா?

போரில் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்து, அவயங்களை இழந்த பிள்ளைகளை இவர்களின் கண்ணுக்கு தெரியவில்லையா. தாங்கள் நடாத்திய போர் என்ற படியால் அது கண்ணுக்கு தெரியவில்லை போலும் எனவே எமது பிரச்சினைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்கு அனைத்து நாடுகளும் பரிந்துரை செய்ய வேண்டும் என்றார். (ம-7,10)

# தெல்லிப்பழையில் தொழிற்ச்சந்தை

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் மேற்படி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்து நடாத்தும் தொழிற்சந்தை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை (31.05.2024) காலை 09 மணி முதல் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பதவிகளிற்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:- கிராமிய வங்கி எழுதுனர்

சம்பளக்குறியீடு - 300/12

சம்பள அளவுத்திட்டம் - 18820-170X10-185X10-22370

வயதெல்லையானது 18 -45 வயதாகும். சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. சங்கப்பணியாளராயின் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கான தகைமையினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இணையத்தள முகவரி www.np.gov.lk இன் சுற்றுநிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கீழ் http://np.gov.lk/cocoperative-employees-commission-cicular-2021 என்ற இணைப்பில் பார்வையிட்டுக் கொள்ள முடியும். அல்லது சங்கத்துடன் தொடர்பு கொண்டு தகைமைகளினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளிற்கு: 021 229 1388
பொதுமுகாமையாளர்: 077 405 1425
விண்ணப்ப முடிவுத் திகதி: 15.06.2024
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி -
தலைவர், முல்லை மேற்கு ப.தெ.வ.அ.கூ சங்கம் பிரதான வீதி , முள்ளியவளை. (1032)



## கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை
## மேலதிக முத்திரை தீர்வை (SD) மற்றும் PSDG

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி/கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதி சேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவைக் கோரமுடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் (தொலைபேசி : 021-205 0348, 021 205 0356, தொலைநகல் : 021-205 0348) எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய அலுவலகத்தில் 2024.05.31 தொடக்கம் 2024.06.19 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி முதல் 15.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரியில் 2024.05.31 ஆம் திகதியிலிருந்து 2024.06.19 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கமுடியாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.06.20 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. சாவகச்சேரி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் 2024.06.14 ஆம் திகதியன்று மதியம் 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.

| இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக (Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(6)/ StampDuty/ 2024/01 | Re Construction of Manthuvil Sribharathy School Road | 5.549 | 90 | C6 & C7 | 55,500.00 | 2024.09.13 |
| 02 | NP/14/41(6)/ Main/2024/01 | Renovation of Sivakami Amman Kovil Back Road At Periyanavalady | 1.525 | 90 | C8 & C9 | 15,500.00 | 2024.08.16 |

விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50 மில்லியனுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 01/2016(III) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும். அத்துடன் இக் கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020(I) என்பனவும் பின்பற்றப்படும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**
**2024.05.31**


## பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு கொடியேற்றல் நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும். நவநாள் வழிபாடுகள் தின மும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

நற்கருணைப் பெருவிழா 12 ஆம் திகதி புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

புனிதரின் திருவிழா திருப்பலி 13 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் திருப்பலி அதிகாலை 5.15 மணிக்கும் திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கும் இடம்பெறும்.

புனிதரின் தேர்பவனி அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் என ஆலய பங்குத் தந்தை அருட்பணி எம். ஜெறோ செல்வநாயகம் அறிவித்துள்ளார். (நி-6)

## புத்தகப்பையில் கசிப்பு பொதிகள் கடத்தி வந்த இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பையில் கசிப்பு பொதிகளை கடத்தி வந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 லீற்றர் கசிப்பினை மூன்று புத்தகப்பைகளில் கடத்தி வந்த 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் பேருந்தில் கசிப்பு கடத்தி வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையிலே இளைஞனை கைது செய்துள்ளதாகவும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-33)

## யாழ்.போதனாவில் அடாவடியில் ஈடுபட்டவருக்கு எதிராக சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் .போதனா வைத்திய சாலையின் ஊழியர்களின் பாதுகாப்பைக் கருதி தாக்குதலில் ஈடுபடுபட்ட நபர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இனிவரும் காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஏற்படாத வகையிலான குறித்த நடவடிக்கை ஒரு முன்னுதாரணமாக இருக்கவேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டது.

இதன்போது வைத்திய சாலை பணிப்பாளர் மற்றும் பொலிஸார் ஆகியோரிடம் அது குறித்து விளக்கம் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் கேட்டறிந்த பின் கருத்துக் கூறுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்திய மூர்த்தி, "வைத்தியசாலைக்கு நாளாந்தம் குறைந்தது 5 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் அவசர நோயாளர் பிரிவுக்கு பல்வேறு அவசர உயிர் காப்பு தேவை கருதி வருவதுண்டு.

அதுமட்டுமல்லாது இவ்வாறு வருபவர்கள் பலவகையான வாகனங்களில் வருகை தருவதால் உயிர்ப் பாதுகாப்பைக் கருதி தடையின்றி உள்ளே அனுமதிப்பது வழமை.

அந்தத் தளர்வான நடைமுறையை தமக்கு சாதகமாக ஒருசிலர் பயன்படுத்துவதால் தான் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

அதேநேரம் இவ்வாறான சம்பவங்களை வைத்து அவசர நோயாளர் பிரிவு நுழைவாயிலில் இறுக்கமான நடைமுறையை கொண்டு வரவும் முடியாது.

அந்தவகையில் வைத்தியசாலையின் பாதுகாப்பு, அதன் மகிமைகள் குறித்து இளைஞர்கள் அதிக கரிசனை எடுப்பதனூடாகவே இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையை கட்டுப்படுத்தலாம். இதற்கு அனைவரது குறிப்பாக இளைஞர்களது ஒத்துழைப்பும் அவசியம்" என அவர் தெரிவித்தார்.

இதேவேளை சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கடுமையான பிரிவுகளில் சட்டத்தின் முன் நிறுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித்...

பாராளுமன்ற தேர்தலாக இருந்தால் என்ன ஜனாதிபதி தேர்தலாக இருந்தால் என்ன அந்தக் காலத்திற்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலை பிற்போட்டு தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தான் விரும்பிய படி ஜனநாயகத்தை மறுக்கின்ற செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

பொதுவேட்பாளர் விடயத்தில் அது இன்றைய காலகட்டத்தின் தேவை என உணர்ந்து தமிழ் தரப்புக்கள், அனைவரையும் இயன்றவரை இணைத்து இந்த ஜனாதிபதி தேர்தலை ஒன்றுபடுத்த முடியும் என நாம் கூறிவருகின்றோம்.

பொதுவேட்பாளர் ஒருவரை கொண்டு வருவதன் மூலம் சரியான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய அரசியல் சக்திகளுக்கும் தென்னிலங்கைக்கும் சர்வ தேசத்திற்கும் எடுத்துக்கூற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## இளம் யுவதி...

தாசன் வினிதா (வயது- 24) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை மதியம் அவர் வீட்டில் தூக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,10,60)

## சம்பள...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் உதவித்தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டமை குறித்தும் ஜனாதிபதி ரணில் நினைவூட்டினார்.

இதேவேளை, தனியார் துறையிலும் ஊதியத்தை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், இவ்வருடம் அதிக சலுகைகளை வழங்குவதற்கான பொருளாதாரப் பலம் எம்மிடம் இல்லாவிட்டாலும் அடுத்த வருடம் அரச ஊழியர்களுக்கு சில சலுகைகளை வழங்குவதற்காக அரச துறையின் சகல துறைகளிலும் நிலவும் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு குழுவொன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளோம் என்றார். (ம-7,10)

## 2009ஆம்...

காணொளிகளுடன் கூடியதாக கெலம் மக்ரேவினால் தயாரிக்கப்பட்ட "நோ ஃபயர் ஸோன்" என்ற ஆவணப்படம் 11 வருடங்களுக்கு முன்னர் "சனல் 4" என்ற தொலைக்காட்சி சேவையில் வெளியாகி பாரிய அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது.

இந்நிலையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இவ்வருடத்துடன் 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பதை முன்னிட்டு கெலம் மக்ரே வெளியிட்டுள்ள நினைவுச்செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது,

யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டு 15 வருடங்களின் பின்னர், அதனை நாம் மே மாதம் 18ஆம் திகதி நினைவுகூருகின்றோம்.

இருப்பினும் தமிழ் மக்களுக்கு எதிரான மீறல்கள் தொடர்கின்றன. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் அதனால் ஏற்பட்ட தாக்கத்துடனேயே தொடர்ந்து வாழ்கின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கான உரிமை இலங்கை அரசினால் மறுக்கப்படுகின்றது. அதேபோன்று இன்றளவிலேயே தமிழர் தாயகப் பகுதிகள் பாதுகாப்புத் தரப்பினரின் வலுவான கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றது.

எனவே முன்னெப்போதையும்விட இப்போது உண்மை மற்றும் நீதி என்பன உடனடியாக உறுதிப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

2009ஆம் ஆண்டில் இடம்பெற்ற மிகமோசமான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவதும், பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதும் இன்றியமையாததாகும்.

இதேபோன்ற சம்பவங்களே இன்று காஸாவில் இடம்பெறுகின்றன. காஸாவில் வாழும் ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என சகல மக்களுக்கு எதிராக இஸ்ரேலிய அரசாங்கம் மிக மோசமான மீறல்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் அடைந்திருக்கும் தோல்வி, தற்போது காஸாவில் இடம்பெற்றுவரும் அதனையொத்த மீறல்களை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

மனித உரிமைகள் மற்றும் நீதிக்கு மதிப்பளிக்கும் சகலரும் "இனி இவ்வாறான சம்பவங்கள் நடைபெறக் கூடாது" என்பதையே வலியுறுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## நாங்...

நிலைப்பாடு ஏற்கெனவே அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரத்நாயக்க தெரிவித்தார்.

ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு நாங்கள் முழுமையாக தயாராகிவிட்டோம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜூலை இறுதி மற்றும் ஓகஸ்ட் மாத தொடக்கத்தில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என அண்மையில் தெரிவித்த கருத்துக்கு பதில


பரிசு வெற்றி

சுன்னாகம் பிரதேச விற்பனை முகவர் சண்முகதாஸ் ஊடாக NLB அதசம்பத ரிக்கெட் மூலம் 29.05.2024 இல் ரூபாய் 250,000 வெல்லப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். (1029)


ளித்த அவர், அவை தமக்கு அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (ம-7,10)

## நாட்டின் வறுமை...

மனுஷ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-7,10)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,

076 097 3127



மஹஜன சம்பத — திகதி 2024.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5489 — J 4 9 5 5 8 6
அத சம்பத — J 5 5 8 6 — சீட்டிழுப்பு இலக்கம் 64

தன நிதானய — திகதி 2024.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1519 — A 13 33 73 75 A — Double Chance 37835

மெகா பவர் — திகதி 30/05/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1837 — U 18 19 26 37 62 — 31836

லக்கி 7 VIP — திகதி 2024.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் 315 — Z 8 7 9 8 0 7 Z

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3731 — சீட்டிழுப்பு திகதி 30.05.2024 — L 18 51 61 69 — L 52775

ஹந்தஹன HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2024.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0798 — மீனம் 23 41 52 60 மீனம் — 36944 — 04

சுபிரி வாசனா — 30.05.2024 — வெற்றி வாரம் 197 — வர்ணம் மஞ்சள் — S 1 3 0 5 0 5 — G 48879 — அடுத்த சுப்பர் ஜக்பொட் 23,067,208.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2463 — வர்ணம் பச்சை — திகதி 30.05.2024 — தினம் வியாழன் — 22 27 53 57 Z — 76665 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,761,220.00

சனிதா — திகதி 2024.05.30 — வெற்றி வாரம் 4624 — வர்ணம் சிவப்பு — 04 25 28 34 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,161,792.80 — 86661

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4175 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2024.05.30 — தினம் வியாழக்கிழமை — 32 41 47 58 கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,230,770.00 — 321934

ஜயோதா — M 05 08 23 66 70 — சீட்டிழுப்பு வாரம் 1639 — 30.05.2024 வியாழன் — 524236 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 525,023,569.00

அட கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2289 — சீட்டிழுப்பு திகதி 2024.05.30 — 31 33 53 67 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 116,428,517.60 — 203733


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகம் காணப்படும் இடங்களில் இவ்வாறு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கரவெட்டி, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் நேற்று காலை முதல் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மழையுடனான வானிலையால் ஏற்படக் கூடிய அபாய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த காலப்பகுதியில் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைத் தெளிவுபடுத்தும் விசேட வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள், மத வழிபாட்டுத் தலங்கள், கட்டடங்கள் உள்ளிட்ட இடங்களில் டெங்கு அபாயத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டுக்கு உதவி வழங்காத தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் மீண்டும் அதிகரித்துள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையுடன் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,10)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0495)

கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு
தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து
V2 GUEST 0743900360 0743900361
(C-0495)

உதவியாளர் தேவை
யாழ் நகரிலுள்ள கிளினிக் ஒன்றிற்குப் பகுதி நேரமாகப் பணிபுரியத்தக்க பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு
077 375 4490
077 220 2769
(C-0492)

அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன





நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா?
உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.
எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.
ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாராக உள்ளோம்.
V2 TRAVELS 0768226244
(C-0495)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
K.K.S வீதி, சுன்னாகம்.
BARATHY
சித்தன்கேணி
(மூன்று நிறுவனங்களிலும்)
A/L 2026
கலை, வர்த்தகப் பிரிவு
நாளை ஆரம்பம்
01.06.2024 சனி
நீங்கள் நன்கு அறிந்த மிகப் பிரபலம் பெற்ற ஆசிரியர்களினால் ஒன்றிணைந்து கற்பிக்கப்படுகின்றன.
தாமதியாது நீங்களும் இணைந்து உயர் பெறுபேறுகளை பெற்றிடுங்கள்.
(C-0494)

வீடு விற்பனைக்கு
கொக்குவில் மேற்கு பகுதியில் பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில் 3 பரப்புடன் வீடு விற்பனைக்கு உண்டு.
076 105 6343
076 928 4191
(1030)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(1035)

DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2026
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
நாளை 01.06.2024 காலை 8.00 மணி (சனி)
முன் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.
நிர்வாகம் : 077 7789 815
(C-0496)

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்
A/L 2026
கலை, வர்த்தகம்
ஆரம்பம் June 01 சனி காலை 8 மணி
மாணவர்கள் பாடத் தெரிவினை மேற்கொள்வதற்காக இம் மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
அலுவலகத் தொடர்பு : 077 469 6695
(C-0484)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நூனாவில் சாவகச்சேரியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு சூழ உள்ள பகுதி
- A9 வீதியில் இருந்து மட்டுவில் செல்லும் றோட் இலுப்பையடி வீதி அரசன் கடை அருகாமை
- பலன் தரும் மரங்கள் உண்டு
- தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு:
070 497 4565, 070 420 7343
(1034)

Canada கல்லூரி அனுமதிகள்
STUDY IN CANADA
மாணவர் விசாவில் கனடா செல்லவுள்ள மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
500 இற்கும் மேற்பட்ட கல்லூரிகளில் அனுமதிகள் குறுகிய காலத்தில் பெற்றுத்தரப்படும்





- O/L தகைமையுடன்
- IELTS குறைந்த புள்ளிகளுடன்/ IELTS இல்லாமல்
- 23 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும்
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்





12 வருடகாலமாக தமிழ் மாணவர்களின் நம்பிக்கையை வென்ற ஒரே ஒரு நிறுவனம்
Winstar Consultants Pvt Ltd
இல.45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 077 6979/ 021 222 6979
(1036)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 51 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடிப் பாதை (18)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது
(குரு) 077 029 4164,
077 329 4130, 077 294 1521
(1034)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.181, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org